www.Padasalai.Net www.TrbTnpsc.com

Dr. G. THIRUMOORTHI, Idappadi, Salem
36105608L0

# 12-Std மாதத் தேர்வு ஜூன் – 2025

காலம் : 1.30 மணி **பொதுத்தமிழ்** மதிப்பெண்கள் : 50

**I பலவுள் தெரிக.** 10 X 1 = 10

1. மயிலை சீனி. வேங்கடசாமி எழுதிய சொல்லாய்வுக் கட்டுரைகளின் தொகுப்பு அ) மத்த விலாசம் ஆ) தமிழ்நாட்டு வரலாறு இ) அஞ்சிறைத் தும்பி ஈ) திசை எட்டும்

2. 'பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல கால வகையினானே' – இந்நூற்பா இடம் பெற்ற இலக்கண நூல் அ) நன்னூல் ஆ) தொல்காப்பியம் இ) தண்டியலங்காரம் ஈ) வீரசோழியம்

3. தண்டியலங்காரம் ......... இலக்கண நூலைத் தழுவி எழுதப்பட்டது அ) இலக்கண விளக்கம் ஆ) தொன்னூல் விளக்கம் இ) குவலயானந்தம் ஈ) காவியதர்சம்

4. சு.த. சற்குணர் உரையைக் கேட்டுப் பெற்ற ஆர்வத்தினால் மயிலை சீனி. வேங்கடசாமி எழுதிய நூல் அ) சமணமும் தமிழும் ஆ) கிறித்துவமும் தமிழும் இ) பௌத்தமும் தமிழும் ஈ) இசுலாமும் தமிழும்

5. "மீண்டுமந்தப் பழமை நலம் புதுக்குதற்கு" கவிஞர் குறிப்பிடும் பழமை நலம் என்பது அ) பாண்டியரின் சங்கத்தில் கொழுவிலிருந்தது ஆ) பொதிகையில் தோன்றியது இ) வள்ளல்களைத் தந்தது
அ) 1 மட்டும் சரி ஆ) 1, 2 இரண்டும் சரி இ) 3 மட்டும் சரி ஈ) 1, 3 இரண்டும் சரி

6. செம்பரிதி, சிவந்து இச்சொற்களின் இலக்கணக் குறிப்பு முறையே அ) பண்புத் தொகை, வினையெச்சம் ஆ) வினைத்தொகை, வினையெச்சம் இ) வினைத்தொகை, பண்புத்தொகை ஈ) பண்புத்தொகை, வினைத்தொகை

7. மொழிபெயர்ப்புக்காவும், ஒரு கிராமத்து நதி என்னும் கவிதை நூலிற்காகவும் இருமுறை சாகித்திய அகாதெமி விருது பெற்றவர் அ) ரா.அ.பத்மநாபன் ஆ) சிற்பி. பாலசுப்ரமணியம் இ) இளசை மணி ஈ) மயிலை சீனி. வேங்கடசாமி

8. பிழையான தொடரைக் கண்டறிக அ) காளைகளைப் பூட்டி வயலை உழுதனர் ஆ) மலைமீது ஏறிக் கல்வெட்டுக்களைக் கண்டறிந்தனர் இ) காலையில் பூத்த மல்லிகை மணம் வீசியது ஈ) நெற்பயிர்கள் மழைநீரில் மூழ்கின

9. கூவம் ஆற்றை .......... என்றும் அழைத்தனர் அ) திருவல்லிக்கேணி ஆறு ஆ) அடையாறு இ) கொற்றலையாறு ஈ) பாலாறு

10. நெடுநல்வாடை நூலின் ஆசிரியர் அ) மாங்குடி மருதனார் ஆ) நக்கீரர் இ) ஔவையார் ஈ) பரணர்

**II எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடை எழுதுக.** 3 x 2 = 6

11. மறக்கக் கூடாதது, மறக்கக் கூடியது எவற்றை என வள்ளுவர் கூறுகின்றனார்?

12. கவிஞர் சிற்பி எவற்றை வியந்துபாட, தமிழின் துணை வேண்டும் என்கிறார்?



ACE Scanner
Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

13. அணியிலக்கணத்தை மட்டும் கூறும் இலக்கண நூல்கள் யாவை?
14. 'தமிழர் வளர்த்த அழகுக் கலைகள்' நூல் பற்றிக் குறிப்பு வரைக.
15. கீழ்திசை சுவடிகள் நூலகம் குறித்து எழுதுக.

III எவையேனும் ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக. 5 x 2 = 10

16. தமிழில் பிழையின்றி எழுதுவதற்கு மேற்கொள்ள வேண்டிய முயற்சிகள் யாவை?
17. *உவமைத் தொடர்களைச் சொற்றொடரில் அமைத்து எழுதுக.*
அ) தாமரை இலை நீர்போல ஆ) கிணற்றுத்தவளை போல
18. *ஏதேனும் ஒன்றனுக்குப் புணர்ச்சி விதி எழுதுக.*
அ) செங்கதிர் ஆ) வானமெல்லாம்
19. *ஏதேனும் ஒன்றனுக்குப் பகுபத உறுப்பிலக்கணம் எழுதுக.*
அ) விளங்கி ஆ) வியந்து
20. *தமிழாக்கி எழுதுக.*
அ) Learning is a treasure that will follow its owner everywhere.
ஆ) The limits of my language are the limits of my world.
21. முடிந்தால் தரலாம், முடித்தால் தரலாம் – இவ்விரு சொற்றொடர்கள் உணர்த்தும் பொருளை அறிந்து தொடரமைக்க.

IV எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடை எழுதுக. 3 x 4 = 12

22. பொருள் வேற்றுமை அணியைச் சான்றுடன் விளக்குக.
23. 'செம்பரிதி மலைமேட்டில் தலையைச் சாய்ப்பான் செந்நிறத்துப் பூக்காடாம் வானமெல்லாம் -தொடர் வெளிப்படுத்தும் காட்சி நயத்தை விளக்குக.
24. மயிலை சீனி. வேங்கடசாமியின் வரலாற்று ஆய்வுகள் குறித்து விளக்குக.
25. குறிப்புகளில் மறைந்திருக்கும் தமிழறிஞர்களைக் கண்டுபிடித்து எழுதுக.
1) கவிஞர்; ஈற்றிரு எழுத்துகளால் அணிகலன் செய்யலாம்.
2) தமிழறிஞர்; முதலிரு எழுத்துகளால் மறைக்கலாம்
3) சிறுகதை ஆசிரியர்; முதல் பாதி நவீனம்
4) முன்னெழுத்து அரசன் ; பின்னெழுத்து தமிழ் மாதம்.
(தமிழ் ஒளி, கோதை, அம்பை, அசோகமித்திரன், புதுமைப்பித்தன், சூடாமணி, ஜெயகாந்தன், மறைமலை அடிகள்).
26. வாடைக் காலத்தில் கோவலர்கள் எவ்வாறு பாதுகாப்பைத் தேடினர்?

V ஏதேனும் ஒன்றனுக்கு மட்டும் விடை எழுதுக. 1 x 6 = 6

27. செய்ந்நன்றியறிதலே அறம் என்பதை வாயுறை வாழ்த்தின் துணைகொண்டு நிறுவுக. (அல்லது) பாரதியின் கடிதம் வாயிலாக நீங்கள் அறிந்து கொண்ட மொழிப்பற்று, சமூகப் பற்று ஆகியவற்றை விவரிக்க.

VI மனப்பாடப் பாடல்களை அடிபிறழாமல் எழுதுக. 2 x 3 = 6

28. அ) 'மாமேயல் மறப்ப' .... எனத் தொடங்கும் நெடுநல்வாடைப் பாடல்.
ஆ) 'படும்' என முடியும் குறட்பா.



ACE Scanner
Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com